பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 05 2024 **MONDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவை ஐந்தாம் கட்டத்தேர்தலில் மாலை ஐந்து மணிவரை 58 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

- விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிப்பொறுப்பேற்றால் புதிதாக 30 லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

- ஈரான் அதிபர் **Ebrahim Raisi** மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை ஒருநாள் தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ஜெர்மனி சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Annu Rani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*----இனி விரிவான செய்திகள்---*

**<<<<<<>>>>>**

மக்களவைத் தேர்தலில் ஐந்தாவது கட்ட வாக்குப்பதிவில் மாலை ஐந்து மணிவரை 58 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக மேற்குவங்கத்தில் 73 சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக மகாராஷ்ட்ராவில் 49 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

லடாக்கில் 67 சதவீத வாக்குகளும், ஜார்கண்டில் 62 சதவீத வாக்குகளும், ஒடிஷாவில் 61 சதவீத வாக்குகளும், உத்தரப்பிரதேசத்தில 56 சதவீத வாக்குகளும், ஜம்மு காஷ்மீரில் 54 சதவீத வாக்குகளும், பீகாரில் 52 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஒடிஸாவில் 35 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஜார்கண்டின் **Gandey** தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் 68 சதவீத வாக்குகள் பதிவாயின.

உத்தரப்பிரதேசத்தின் லக்னோ கிழக்குத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் 52 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

**<<<<<<>>>>>**

மக்களவைக்கு எஞ்சியுள்ள இரண்டு கட்ட தேர்தலையொட்டி, தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு நடைபெறும் பிரச்சார கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் கலந்துகொண்டு மக்களிடம் வாக்கு சேகரித்து வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, மேற்குவங்கத்தில் உள்ள **Jhargram** –ல் நடைபெற்ற பேரணி ஒன்றில் இன்று கலந்துகொண்டு பேசினார்.

வாக்காளர்களின் ஆதரவை பெற முடியாமல் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தவித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஒடிஷாவில் **Angul** மற்றும் கட்டாக்கில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டங்களில் திரு நரேந்திர மோடி பங்கேற்றார்.

அப்போது, ஒடிஷாவில் பிஜேபி ஆட்சிப்பொறுப்பேற்றால் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒரு குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 200-ல் இருந்து, 3 ஆயிரத்து 100 ரூபாயாக உயர்த்தப்படும் என்று அவர் கூறினார்.

மேலும், பிஜு ஜனதாதளத்தின் ஆட்சியில் ஒடிஷாவின் தாதுவளம் மற்றும் கலாச்சாரம் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாக திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, ஹரியானாவில் நடைபெற்ற பிரச்சார கூட்டங்களில் கலந்துகொண்டு பேசினார்.

விவசாயிகளின் நலனுக்காக பிஜேபி அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ், இன்று உத்தரப்பிரதேசத்தில் உள்ள **Domariyaganj** பகுதியில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிப்பொறுப்பேற்றால் புதிதாக 30 லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், அக்னி வீர் திட்டம் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் திரு அகிலேஷ் யாதவ் கூறினார்.

<<<<<<>>>>>

தில்லியில் உள்ள ஏழு மக்களவைத் தொகுதிகளில் வரும் 25-ஆம் தேதியன்று ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறுவதையொட்டி, 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் வசதியை தேர்தல் ஆணையம் கடந்த வாரம் செயல்படுத்தியது.

இந்த வசதியை பயன்படுத்தி, இதுவரை 4 ஆயிரத்து 774 பேர் வீட்டில் இருந்தபடியே வாக்குகளை செலுத்தியதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5 ஆயிரத்து 406 வாக்காளர்கள் இவ்வசதியை பெற விண்ணப்பித்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

காஷ்மீரில் இருந்து இடம்பெயர்ந்து தில்லியில் வாழ்ந்து வருபவர்கள் தங்களது வாக்குகளை செலுத்தும் வகையில் நான்கு சிறப்பு வாக்குச்சாவடிகளை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் இல்லம், பிருத்விராஜ் சாலை, ஷாலிமார் பாஹ், தில்ஷாத் கார்டன் மற்றும் நஜர்கர்க் பகுதிகளில் இந்த வாக்குச்சாவடிகள் செயல்படும் என்றும், அங்கு சென்று வாக்களிக்க போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கினை உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்துள்ளது.

நீதிபதிகள் **Bela M Trivedi, Pankaj Mithal** ஆகியோர் அடங்கிய விடுமுறைக்கால அமர்வு முன்பு இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரரின் கருத்துக்களை ஏற்க முடியாது என்றும், அவர் விரும்பினால் மனுவை திரும்பப்பெற்றுக்கொள்ளலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

மனுதாரர் மனுவை திரும்பப்பெற்றதையடுத்து, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**<<<<<<>>>>>**

ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் நாட்டு அதிபர் **Ibrahim Raisi** உயிரிழந்ததையடுத்து, இடைக்கால அதிபராக துணை அதிபர் திரு முகமத் முக்பர் நியமிக்கப்படுவதாக அந்நாட்டின் தலைவர் திரு அயதுல்லா அலி தொமேனி அறிவித்துள்ளார்.

மறைந்த **Ibrahim Raisi**-க்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அந்நாட்டில் ஐந்து நாட்கள் தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அதிபர் பதவிக்கான தேர்தல் அடுத்து வரும் 50 நாட்களில் நடைபெறக்கூடும் என்று அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, **Ibrahim Raisi** மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும் என்றும், அரசு நிகழ்ச்சிகள் நடைபெறாது என்றும் மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

தைவான் நாட்டின் புதிய அதிபராக ஜனநாயக முற்போக்கு கட்சியை சேர்ந்த **Lai Ching – Te** இன்று பதவியேற்றுக்கொண்டார்.

அவருடன் துணை அதிபராக **Hsiao Bi – Khim** –மும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த பதவியேற்பு விழாவில், தைவான் நாட்டுடன் நெருக்கமான உறவை பேணி வரும் எட்டு நாடுகளின் தலைவர்கள் உட்பட 500-க்கும் மேற்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்துகொண்டதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

சத்தீஸ்கர் மாநிலம் கபீர்தாம் மாவட்டத்தில், இன்று நேரிட்ட சாலை விபத்தில் 14 பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

வனப்பகுதியில் இருந்து தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்ததால் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த எட்டு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தோர் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாக தமது சமூக வலைதள பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோரும் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நான்கு பேரை பயங்கரவாத எதிர்ப்புப்படையினர் இன்று கைது செய்தனர்.

இவர்கள் ஐ எஸ் அமைப்போடு தொடர்புடையவர்கள் என்றும், இலங்கையிலிருந்து சென்னை வழியாக அகமதாபாத் சென்றதாகவும், அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பயங்கரவாத எதிர்ப்புப்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சிக்கிம் மாநிலம் கேங்டாக்கில் பருவமழை காரணமாக நிலச்சரிவுகள் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கை அடிப்படையில் அங்கு, நிலம் தோண்டும் பணிகள் மேற்கொள்ள தடை விதிக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு அபாயங்களை தவிர்க்கும் வகையில், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், செப்டம்பர் 30-ஆம் தேதிவரை இது அமல்படுத்தப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<<>>>>>

வங்கக்கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Annu Rani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜப்பானின் **Kobe** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பிரிவில் இந்தியாவின் **Deepthi Jeevanji** தங்கப்பதக்கத்தை வென்றார்.

ஆடவர் வட்டு எறிதலில் **Yogesh Kathuniya** வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 13-ஆவது இடத்தில் உள்ளது.

---------------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் **Sandeep Singh, Arjun Babuta** ஆடவர் பிரிவிலும், **Ramita Jindal, Elavenil Valarivan** மகளிர் பிரிவிலும் தகுதி பெற்றுள்ளனர்.

--------------

ஆசிய தொடர் ஓட்டப்போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் இன்று தொடங்கிய இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

----------------

**<<<<<<END>>>>>**